# கலைஞர் தொடங்கிய ‘இராணிப்பேட்டை சிப்காட்’டில் இன்று பல்வேறு நிறுவனங்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!... முதல் பக்கத் தொடர்ச்சி

9,000 கோடி ரூபாய் முதலீடு செய்தது டன், 5,000 நபர்களுக்கு வேலைவாய்ப்பும் அளிக்க இருக்கிறது. இந்தப் பணிகளை விரைந்து முடித்து, திறப்பு விழாவிற்கும் சந்திரசேகரன் அவர்கள் வரவேண்டும் என்று நான் இந்த நேரத்தில் என்னுடைய வேண்டுகோளை வைக்க விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல, இன்னொரு வேண்டுகோளும் உண்டு! உங்களுடைய நிறுவனங்கள் மூலமாக கூடுதல் முதலீடுகளை நீங்கள் தமிழ்நாட்டில் செய்யவேண்டும். செய்து கொண்டிருக்கிறீர்கள். அதை நான் மறுக்கவில்லை; அது உங்கள் கடமை. ஏனென்றால், இது என் மாநிலம் அல்ல, உங்கள் மாநிலம் அல்ல; நம்முடைய மாநிலம். இது உங்களுடைய மாநிலம்.

**50 ஆண்டுகளுக்கு முன்னர் –**

**கலைஞர் தொடங்கிய ‘இராணிப்பேட்டை சிப்காட்’**

நான் அடிக்கடி குறிப்பிடுவது, “அனைத்து மாவட்டங்களுக்கும் சீரான வளர்ச்சி!” அந்த வகையில், ராணிப்பேட்டை மாவட்டத்தில் “டாடா மோட்டார்ஸ்” நிறுவனம் தொழில் தொடங்குவது கூடுதல் மகிழ்ச்சி!

**இந்த நேரத்தில் இன்னொரு விஷயத்தையும் நான் பகிர்ந்துகொள்ள விரும்புறேன். 1973 ஆம் ஆண்டு தலைவர் கலைஞர் அவர்கள் இதே ராணிப்பேட்டையில்தான் முதல் ‘சிப்காட்’டை தொடங்கினார். ஐம்பது ஆண்டுகள் கடந்து, இங்கே பல்வேறு நிறுவனங்களைப் பார்ப்பது பெருமையாக இருக்கிறது.**

தமிழ்நாடுதான் இந்தியாவின் வாகன உற்பத்தி தலைநகரம்! அதுமட்டுமல்ல, EVehicle களின் தலைநகரம்!

ஃபோர்டு, ஹூண்டாய், ரெனோ நிஸான் என்று சர்வதேச வாகன நிறுவனங்களும் இங்கே இருக்கிறது. டாடா மாதிரி சர்வதேச மார்க்கெட்டில் விற்பனை செய்யப்படுகின்ற வாகனங்களைத் தயாரிக்கின்ற தொழிற்சாலையும் இங்கேதான் இருக்கிறது.

கூடுதல் தகவல், இந்தியாவில் விற்பனை செய்யப்படுகின்ற மொத்த மின் வாகனங்களில், 40 விழுக்காடு தமிழ்நாட்டில்தான் உற்பத்தி செய்யப்படுகிறது. அதுமட்டுமல்ல, எலக்ட்ரானிக்ஸ் ஏற்றுமதியிலும் இந்தியாவிலேயே தமிழ்நாடுதான் நம்பர் ஒன்!

‘நிதி ஆயோக்’ கொடுத்த ஏற்றுமதி தயார் நிலை குறியீட்டிலும், ‘தமிழ்நாடுதான் நம்பர் ஒன்’ என்று குறிப்பிட்டிருக்கிறது!

> **டாடா குழுமத்தின் தலைவர் சந்திரசேகரன் அவர்கள், இந்த விழாவில் பங்கேற்று இருப்பது நமக்கெல்லாம் கூடுதல் மகிழ்ச்சி ஏற்படுத்தியிருக்கிறது! நாமக்கல் மாவட்டத்தைச் சேர்ந்தவர் அவர். உலகப் புகழ்பெற்ற நிறுவனத்தின் தலைமைப் பதவியில் இருப்பது அவருக்கு மட்டுமல்ல, தமிழ்நாட்டுக்கே இது கிடைத்திருக்கக்கூடிய பெருமை!**
>
> **வேளாண் குடும்பத்தில் பிறந்து பெருமைமிகு அரசுப் பள்ளியில் படித்த இவர், இந்தளவுக்கு உயர அவருடைய தன்னம்பிக்கையும், அறிவாற்றலும்தான் காரணம் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது!**
>
> **இந்தியாவின் முன்னணி நிறுவனங்களில் ஒன்றாக விளங்கிக் கொண்டிருக்கக் கூடிய டாடா நிறுவனத்தின் தலைவராக இருக்கின்ற சந்திரசேகரன் அவர்கள், இந்திய இளைஞர்களுக்கெல்லாம் முன்மாதிரியாக அவர் விளங்கிக் கொண்டிருக்கிறார். அத்தகைய தலைசிறந்த மனிதருக்கு என்னுடைய அன்பான வணக்கம்!**

இந்தியாவின் வளர்ச்சியில் தமிழ்நாடு முக்கியப் பங்கு வகிக்கிறது. இந்தியாவிலேயே இரண்டாவது பெரிய பொருளாதாரமாக தமிழ்நாடு விளங்கிக் கொண்டிருக்கிறது.

நேற்றுகூட, ‘தி இந்து’ நாளேட்டில் ஒரு கட்டுரையை நான் எழுதியிருந்தேன். “தமிழ்நாட்டின் வளர்ச்சி தனித்தன்மை வாய்ந்தது. பொருளாதார வளர்ச்சி மட்டுமல்ல, அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி, சமூகநீதியை உள்ளடக்கிய வளர்ச்சி, பெண்கள் முன்னேற்றம் மற்றும் சமத்துவம் போன்ற கொள்கைகள் அடித்தளமாக கொண்ட ஒட்டுமொத்த வளர்ச்சி என்பதால், தமிழ்நாடு மற்ற மாநிலங்களிலிருந்து சற்று தனித்து இன்றைக்கு ஒளிர்ந்து கொண்டிருக்கிறது” என்று அந்தக் கட்டுரையில் நான் குறிப்பிட்டுக் காட்டியிருந்தேன்.

**‘1 டிரில்லியன் டாலர்’**

**பொருளாதார இலக்கு!**

இங்கே தம்பி டி.ஆர்.பி.ராஜா இருக்கிறார். அவரும் பேசினார். தொழிற்துறைக்கு நான் வழங்கியிருக்கின்ற இலக்கு; “2030ஆம் ஆண்டுக்குள் தமிழ்நாட்டை ஒரு ட்ரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதாரமாக மாற்ற வேண்டும். இந்தியாவில் மட்டுமல்ல, தெற்காசியாவிலேயே முதலீடுகள் மேற்கொள்ள சிறந்த மாநிலமாக மேம்படுத்தவேண்டும்” என்பதாகும்.

அந்தப் பயணத்தில் நம்முடைய திராவிட மாடல் அரசு பொறுப்பேற்றதிலிருந்து, 10 இலட்சம் கோடி ரூபாய்க்கு மேல் முதலீடுகளை ஈர்த்திருக்கிறோம். 31 இலட்சம் நபர்களுக்கு நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்பை நாம் ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறோம்.

**தமிழ்நாட்டு இளைஞர்களின் உயர்வு**

**‘திராவிடல் மாடல்’ அரசு அனைத்தையும் செய்யும்!**

உலகின் பல்வேறு நாடுகளுக்குப் பயணம் செய்து, முதலீடுகளை நாங்கள் ஈர்த்திருக்கிறோம். முதலீடுகளை ஈர்ப்பது மட்டுமல்ல, அதை விரைந்து செயல்படுத்துவதற்கான நடவடிக்கைகளையும் எடுத்துக் கொண்டிருக்கிறோம் என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். அதற்குச் சான்று தான் இந்த விழா. டாடா மோட்டார்ஸின் இந்தத் திட்டத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் இந்த ஆண்டு மார்ச் மாதம்தான் போடப்பட்டது. ஆறு மாதத்திற்குள் இந்தத் திட்டத்திற்கான அடிக்கல் நாட்டு விழா இன்றைக்கு நடந்திருக்கிறது என்றால், தமிழ்நாட்டின் வளர்ச்சிக்காக, தமிழ்நாட்டு இளைஞர்களின் உயர்வுக்காக நம்முடைய திராவிட மாடல் அரசு, அனைத்தையும் செய்யும்! அதற்கு டாடா மோட்டார்ஸ் போன்ற நிறுவனங்கள் எங்களுக்குப் பக்கபலமாக இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். நிறைவாக, மதிப்பிற்குரிய சந்திரசேகரன் அவர்களுக்கு மீண்டும் ஒருமுறை நன்றியைத் தெரிவித்து, அடுத்து விரைவில் அவர் புதிய தொழிற்சாலையை கொண்டு வருவார் என்ற நம்பிக்கையோடு காத்திருக்கிறேன் என்பதையும் தெரிவித்து, விடைபெறுகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்!

# டாட்டா வாகன உற்பத்தி - 5000 பேருக்கு வேலைவாய்ப்பு!

முதல் பக்கத் தொடர்ச்சி

அந்த வகையில், எஃகு, தகவல் தொழில்நுட்பம், மோட்டார் வாகன உற்பத்தி போன்ற பல்வேறு துறைகளில் உலகளவில் சிறப்புடன் செயல்பட்டு வரும் டாடா குழுமத்தின் ஒரு அங்கமான டாடா மோட்டார்ஸ் நிறுவனம் தனது புதிய அதிநவீன மோட்டார் வாகன உற்பத்தி ஆலையை இராணிப்பேட்டை மாவட்டம், சிப்காட் பனப்பாக்கம் தொழிற்பூங்காவில் 9,000 கோடி ரூபாய் முதலீடு மற்றும் 5,000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் அமைக்க முன் வந்துள்ளது.

**அரசின் நடவடிக்கைக்கு**

**சிறந்த எடுத்துக்காட்டு!**

இத்திட்டத்தில், 100 சதவிகிதம் புதுப்பிக்கத்தக்க எரிசக்தியைப் பயன்படுத்தி, டாடா மோட்டார்ஸ் மற்றும் ஜாகுவார் லேண்ட் ரோவர் (JLR) சொகுசு வாகனங்கள் உற்பத்தி செய்யப்படவுள்ளன. இவ்வாண்டு மார்ச் மாதம் இத்திட்டத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது. புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுதிடப்பட்ட ஆறு மாதத்திற்குள், இத்திட்டத்திற்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் இன்றைய தினம் அடிக்கல் நாட்டப்பட்டது குறிப்பிடத்தக்கது. இது புரிந்துணர்வு ஒப்பந்தங்களை செயல்படுத்துவதற்கு தமிழ்நாடு அரசு துரிதமாக மேற்கொண்டுவரும் நடவடிக்கைகளுக்கு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

**தமிழ்நாட்டில் தடம்**

**பதித்துள்ள டாடா நிறுவனங்கள்!**

டாடா குழுமத்தின் துணை நிறுவனங்களான டிசிஎஸ், டைடன், டாடா பவர், டாடா எலெக்ட்ரானிக்ஸ் தாஜ் ஹோட்டல்கள் ஆகியவை ஏற்கெனவே தமிழ்நாட்டில் தடம் பதித்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்ச்சியில், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர். காந்தி, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ஜெகத்ரட்சகன், சட்டமன்ற உறுப்பினர்கள் ஏ.எம். முனிரத்தினம், ஜெ.எல். ஈஸ்வரப்பன் மற்றும் பி. கார்த்திகேயன், டாடா சன்ஸ் நிறுவனத்தின் தலைவர் என். சந்திரசேகரன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அரசு செயலாளர் வி.அருண் ராய். சிப்காட் மேலாண்மை இயக்குநர் டாக்டர் கி.செந்தில்ராஜ், வழிகாட்டி நிறுனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் வே.விஷ்ணு, இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் ஜெ.யு.சந்திரகலா, டாடா மோட்டார்ஸ் குழுமத்தின் தலைமை நிதி அலுவலர் P.B. பாலாஜி, டாடா மோட்டார்ஸ் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர்சைலேஷ் சந்திரா, JLR நிறுவனத்தின் இயக்குநர் ஃப்ராங்க் லட்விக் (Thiru Frank Ludwig) மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### அரசு தரிசு நிலங்களை கையகப்படுத்தி

# அருந்ததிய மக்களுக்கு வழங்கிட தனிக்குழு ஏற்படுத்த வேண்டும்!

## முதலமைச்சரிடம் கழக துணை பொதுச் செயலாளர் – நீலகிரி எம்.பி., ஆ.ராசா கோரிக்கை!

*நீலகிரி, செப். 29 -*

அருந்ததியர் மக்களுக்கு வீட்டுமனை பட்டா வழங்கிட ஏதுவாக வருவாய் அலுவலக நிர்வாக அலகு ஒன்றை, தனி மாவட்ட வருவாய் அலுவலர் ஒருவர் தலைமையில் ஒரு கோட்டாட்சியர் மற்றும் போதுமான வட்டாட்சியர்கள் உள்ளடக்கிய குழுவை அமைக்க வேண்டும் என கழக துணை பொதுச்செயலாளர், நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர், முன்னாள் ஒன்றிய அமைச்சர் ஆ.ராசா முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களிடம் கோரிக்கை மனு அளித்துள்ளார்.



அதில் கூறியுள்ளதாவது : கிருஷ்ணகிரி, தர்மபுரி, சேலம், நாமக்கல், திருப்பூர், ஈரோடு, கோவை உள்ளிட்ட வருவாய் மாவட்டங்களில் வசிக்கும் ஆதிதிராவிடர் அருந்ததியர் மக்களுக்கு போதுமான வாழ்விட வசதிகள் இல்லை என்பதை தங்களின் கவனத்திற்கு பல்வேறு சமூக மற்றும் அரசியல் அமைப்புகள் ஏற்கனவே கொண்டு வந்துள்ளன.

எனது நீலகிரி நாடாளுமன்றத் தொகுதிக்குட்பட்ட அவிநாசி, மேட்டுப்பாளையம் மற்றும் பவானி சாகர் பகுதிகளில் வருவாய் கிராமங்களில் உள்ள தரிசு நிலங்களை கண்டறிந்து. 500 க்கும் மேற்பட்ட குடியிருப்பு பட்டாக்களை அரசின் மூலம் ஏற்கனவே வழங்கி உள்ளோம். அது போலவே மற்ற மாவட்டங்களிலும் அருந்ததிய மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கிட போதுமான அளவு அரசு தரிசு நிலங்கள் உள்ளதாக வருவாய்த்துறை அலுவலர்கள் மூலம் தெரிய வருகிறது.

எனவே, இம்மாவட்டங்களில் உள்ள அரசு தரிசு நிலங்களை கண்டறிந்து, கையகப்படுத்தி இப்பகுதியில் கணிசமான அளவு மக்கள் தொகை கொண்ட அருந்ததியர் மக்களுக்கு வழங்கிட ஏதுவாக “வருவாய் அலுவலக நிர்வாக அலகு” (Revenue Administrative Unit) ஒன்றை, தனி மாவட்ட வருவாய் அலுவலர் ஒருவர் தலைமையில் ஒரு கோட்டாட்சியர் மற்றும் போதுமான வட்டாட்சியர்கள் உள்ளடக்கிய குழு அமைத்து பூர்வாங்க பணிகளை மேற்கொள்ள அன்புடன் வேண்டுகிறேன்.

தலைமைச் செயலாளர் அல்லது வருவாய் செயலாளர் ஆகியோரின் கண்காணிப்பில் இப்பணிகளை குறித்த காலத்தில் முடித்திடும் வகையில் உரிய ஆணைகள் வழங்கிடவும் அன்புடன் வேண்டுகிறேன் என்று கேட்டுக் கொண்டுள்ளார்.

### ஆர்க்காடு தொகுதி கழக முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்

# பி.என்.சுப்பிரமணியன் 9ஆம் ஆண்டு நினைவேந்தல்!

## கழகத்தினர் அஞ்சலி!



*இராணிப்பேட்டை செப். 29 -*

கடமை உணர்வுடன் மக்கள் பணியாற்றி, கண்ணியம் மாறாமல் வாழ்ந்து காட்டி, கட்டுப்பாடு காத்து கழகம் வளர்த்தவர் ஆற்காடு நகரக் கழக செயலாளராக 25 ஆண்டுகள் பணியாற்றியவர். முன்னாள் வேலூர் மாவட்டப்பொருளாளர், முன்னாள் தணிக்கைக்குழு உறுப்பினர், ஆற்காடு சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் பி.என்.சுப்பிரமணியன் அவர்களின் 9ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்ச்சி 1.10.2024 அன்று நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சியில் மு.நகர செயலாளர், ஆற்காடு நகர அவைத்தலைவர் பி.என். எஸ்.இராஜசேகரன், இராணிப்பேட்டை மாவட்ட மருத்துவரணி அமைப்பாளர், மருத்துவர் பி.என்.எஸ். சரவணன், ஆற்காடு நகர மன்ற துணைத் தலைவர், ஆற்காடு நகராட்சி இராணிப்பேட்டை மாவட்ட மகளிர் அணி துணைத்தலைவர் மருத்துவர் எஸ்.பவளக்கொடி சரவணன் மற்றும் குடும்பத்தினர் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்துகின்றனர்.

# நீலகிரி மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் பா.மு. முபாரக் அறிவிப்பு!



நீலகிரி மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம் 1.10.2024 செவ்வாய்க்கிழமை காலை 11 மணி அளவில் மாவட்டக் கழக அவைத்தலைவர் கே.போஜன் தலைமையில், கழக தேர்தல் பணி செயலாளரும், சுற்றுலாத்துறை அமைச்சருமான கா.ராமசந்திரன் முன்னிலையில் மாவட்டக் கழக அலுவலகமான உதகை கலைஞர் அறிவாலயத்தில் நடைபெறவுள்ளது.

இதில் மாவட்டக் கழக நிர்வாகிகள், மாவட்டத்திலுள்ள தலைமைக் கழக நிர்வாகிகள், தலைமைக் கழக செயற்குழு-பொதுக்குழு உறுப்பினர்கள், நகர, ஒன்றிய பேரூர்க் கழகச் செயலாளர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் தலைவர்கள் உள்ளிட்ட அனைவரும் தவறாது கலந்து சிறப்பிக்க வேண்டுகிறேன்.

பொருள்:

1. 21.8.2024 நடைபெற்ற மாவட்ட கழக கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுபடி கழக மூத்த முன்னோடிகளுக்கு வழங்கப்பட உள்ள பொற்கிழி பெறுபவர்களின் பட்டியலை நிறைவுசெய்தல்.
2. 29.10.2024 வெளியிடவுள்ள வரைவு வாக்காளர் பட்டியல் சரிபார்த்தல் குறித்து.
3. கழக ஆக்க பணிகள்.

**பா.மு.முபாரக்**
செயலாளர்
நீலகிரி மாவட்ட தி.மு.க.




சென்னை, சேப்பாக்கம் பொதுப்பணித்துறை கூட்டரங்கில், 26.09.2024 அன்று திருச்சி மண்டலப் பொதுப் பணித்துறையின் மூலம் நடைபெற்று வரும் கட்டுமானப் பணிகள் குறித்து, பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வுக் கூட்டத்தில், பொதுப்பணித்துறையில் மூன்று நபர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமன ஆணைகளை வழங்கினார். இந்த நிகழ்வின் போது, பொதுப்பணித்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத்ராம்சர்மா, முதன்மைத் தலைமைப் பொறியாளர் கே.பி.சத்தியமூர்த்தி ஆகியோர் உடனிருந்தனர்.




கத்தார் திராவிட முன்னேற்றக் கழகம் அயலக அணி (NRTIA) சார்பாக நடத்தும் கழக பவள விழா, முப்பெரும் விழா மற்றும் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழாவில் வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர். கலாநிதி வீராசாமி (தலைவர் கழக அயலக அணி) ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன், பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.